செ.வெ.எண்.27 நாள்:16.11.2020.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் வரும் 18.11.2020 அன்று மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் வரும் 18.11.2020 புதன்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் பழங்குடியினர் பண்பாட்டு மையம், (HADP – Resource Centre For Tribal Culture, Gardan Road,Ooty) மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இம் முகாமில் இதுவரை மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை பெறாதவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. அடையாள அட்டை பெறாத மாற்றுத்திறனாளிகள் தங்களின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் நான்கு (4), குடும்ப அட்டை அசல் மற்றும் நகல், ஆதார் அட்டை அசல் மற்றும் நகலுடன் இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம். இச்சிறப்பு முகாமில் கோவை மாவட்ட மருத்துவகல்லூரி மருத்துவமணையிலிருந்து சிறப்பு மருத்துவர்கள் 1) ரத்தவியல் மருத்துவர் 2) நரம்பியல் மருத்துவர் கலந்து கொண்டு அடையாள அட்டை வழங்க உள்ளார்கள். மேலும் ஆதார் அட்டை எடுக்காத மாற்றுத்திறனாளிகள் மேற்படி முகாமில் கலந்து கொண்டு ஆதார் அடையாள அட்டை எடுத்துக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.